2023

முத்தரசி

கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்

VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023

# சங்க இலக்கியத்தில் பழந்தமிழர் வழிபாடுகள்

முனைவர் **ம.புவனேஸ்வரி,**

உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை,

ஸ்ரீ.கா.சு.சு.கலைக்கல்லூரி,திருப்பனந்தாள்.

பழங்காலத்தில் நாகரிக வாழ்வு தோன்றுவதற்கு முன்னர் மக்கள் குழுவினராக, இயற்கையைச் சார்ந்து வாழ்ந்த காலத்திலேயே அவர்களிடம் வழிபாடு தோன்றிவிட்டது. இயற்கையின் பெருங்கருணையையும் பேராற்றலையும் கண்ட பின்னர் இயற்கை வழிபாடு தோன்றியது. வீரமரணம் அடைந்த தம் இனத்தவருக்குக் கல்நட்டுத் தெய்வமாக வழிபட்டனர். காலப்போக்கில் திணைசார் தெய்வ வழிபாடு தோன்றியது. கருப்பொருள்களில் ‘தெய்வம்’ முதலிடத்தைப் பெற்றது. பல்வேறு சமயங்களும் சமயம் சார்ந்த தெய்வ வழிபாடுகளும் பிற்காலத்தில் தோன்றின. காலந்தோறும் வளர்ந்து வந்த இவ்வழிபாடுகளே நன்கு நாகரிகமடைந்த பெருந்தெய்வ வழிபாடுகளாக இன்றும் தொடர்கின்றன. இன்றைய பெருந்தெய்வ வழிபாடுகளுக்கெல்லாம் தொடக்கமாக அமைந்த இயற்கை மற்றும் நடுகல் வழிபாடுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை வழிபாடு**

பழந்தமிழர் வாழ்க்கை இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாகும். அவர்களது வாழ்வின் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இயற்கையே காரணமாக அமைந்தது. இயற்கையை முழுமையாக உணர்ந்து அதனோடு இடையறாத உறவு கொண்டிருந்தனர். இயற்கையின் கொடையை வியந்ததோடு அதன் சீற்றத்திற்கு அஞ்சினர். அதனைத் தெய்வமாக வழிபட்டனர். தம் நன்றியை வெளிப்படுத்தும் வகையில் சடங்குகளையும் மேற்கொண்டனர்.

“ஞாயிறு, திங்கள், மேகம், மழை, இடி, மின்னல், மலை, மரம் முதலான இயற்கைப் பொருள்கள் தமக்குள் ஆற்றலைப் பெற்றுள்ளன என்பதும், அந்த ஆற்றலே மனித வாழ்வைக் கட்டுப்படுத்துகின்றன என்பதும் இயற்கை வழிபாட்டில் முதன்மையாகக் கருதப்பெற்றன”[1] என்று சிலம்பு நா.செல்வராசு குறிப்பிட்டுள்ளார்.

வான்நோக்கி வாழ்வது உயிர்களின் இயல்பு. குறிஞ்சித்திணை மக்கள் மலையில் மழை மேகங்கள் சூழவேண்டும் என்பதற்காக உயர்வான பலியினைத் தூவிச் சடங்குகள் செய்தனர். அவர்கள் விரும்பியவாறே மழை பெய்தது.

SAMPLE

மிகுதியாக மழை பொழிந்து விட்டதால் மழை மேகங்கள் மீண்டும் உயரே செல்ல வேண்டுமெனக் கடவுளை வேண்டினர். மழை நின்றது. இதனால் அம்மக்கள் மிக மகிழ்ந்தனர் என்பதை,

“மலைவான் கொள்கென உயர்பலி தூஉய்

மாரி யான்று மழைமேக்கு உயர்கெனக்

கடவுட் பேணிய குறவர் மாக்கள்

பெயல்கண் மாறிய உவகையர் சாரல்

புனத்தினை அயிலும் நாட!”[2]

என்று புறநானூறு காட்டுகின்றது.

குறவன் மழைவேண்டிக் கடவுளை வழிபட்டபோது, மேகம் மிகுதியான மழையைப் பொழிந்ததாக ஐங்குறுநூறும் குறிப்பிடுகிறது.

“குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி

நுண்பல் அழிதுளி பொழியும் நாட”[3]

மழையை வேண்டியவுடன் மழை பெய்ததாகக் கூறும் பாடல் நற்றிணையிலும்[4] அமைந்துள்ளது.

மழைக்குக் காரணமான மரங்களையும் தெய்வமாக வழிபட்டுள்ளனர்.

“கடவுள் முதுமரம்”[5]

“தொன்றுறை கடவுள் சேர்ந்த

பராரை மன்றப் பெண்ணை”[6]

“மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்

கொடியோர்த் தெறூஉமென்ப”[7]

இன்றைய திருக்கோயில்களில் காணப்படும் தலமரங்கள் பண்டைய மரவழிபாட்டின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன. “எளிய வாழ்க்கையினர் மரத்து நிழல்களில் கூடி இறைவனை வழிபட்டனர். ஆதிமுறை அதுவேயாம் என்பதற்குச் சான்றாக ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு மரம் இறைவனுக்குச் சிறந்ததாகப்

SAMPLE

பேசப்படுகிறது. திருநெல்வேலியில் மூங்கில் வனமும், மதுரையில் கடம்ப வனமும், சிதம்பரத்தில் தில்லை வனமும், மயிலையில் புன்னை வனமும் ஆதியில் வழிபடும் இடங்களாய் இருந்தன"[8] என்பது கா.சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் கூற்றாகும்.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய, தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தின் வாழ்த்துப் பகுதியில் திங்கள், ஞாயிறு, மழை ஆகியவை போற்றப்பட்டுள்ளமை இங்குச் சிந்திக்கத்தக்கது. திருக்குறளிலும் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரம் இடம்பெற்றுள்ளது. இவை பண்டைய இயற்கை வழிபாட்டின் தொடர்ச்சியாக அமைந்துள்ளன.

**நடுகல் வழிபாடு**

வெட்சி, கரந்தைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்குக் கல்நட்டு வழிபட்டமையை இலக்கியங்கள் விரித்துரைக்கின்றன. நடுகல் நாட்டப்பெறும் முறை குறித்துத் தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டுள்ளது.

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று மரபின் கல்"[9]

பண்டைச் சமூகத்தில் நடுகல் வழிபாடே முதன்மையானதாக இருந்துள்ளது. பகைவரை எதிர்த்து நின்று, அவரது களிற்றினை வீழ்த்தி, வீழ்ந்த வீரனது நடுகல்லை வழிபடுவதல்லது, நெல்லைத் தூவி வழிபடக்கூடிய வேறு கடவுளர் இல்லை என்று புறநானூறு பறைசாற்றுகின்றது.

"ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிரேந்து மருப்பின் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே"[10]

நடுகல்லிற்கு மயிலிறகினைச் சூட்டி, துடியை முழக்கி, கள்ளினைப் படைத்துச் செம்மறி ஆட்டினைப் பலியிடும் வழக்கம் இருந்துள்ளது.

"நடுகல் பீலிசூட்டித் துடிப் படுத்துத்

SAMPLE

தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்”[11]

நடுகல்லை நாள்தோறும் நீராட்டிப் பலியிட்டு நெய்விளக்கேற்றி வழிபட்டுள்ளனர்.

இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர்ப்

புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி

நன்னீராட்டி நெய்ந்நறை கொளீஇய

மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்”[12]

பழந்தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்த பெண்ணொருத்தி, தான் ஓயாமல் விருந்தெதிர் கோடலைப் பெறவேண்டுமென்று நடுகல்லைக் கையால் தொழுது வணங்குவதை,

“ஒலிமென் கூந்தல் ஒண்ணுதல் அரிவை

நடுகல் கைதொழுது பரவும் ஒடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே”[13]

என்று புறநானூறு பதிவு செய்துள்ளது.

பாணர்கள் செல்லும் வழியில் வீரர்களது நடுகற்கள் மிகப் பலவாக உள்ளன என்று மலைபடுகடாம் குறிப்பிடுகிறது.

“ஒன்னாத் தெவ்வர் உலைவிடத் தார்த்தென

நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்

கல்லேசு கவலை யெண்ணுமிகப் பலவே”[14]

எமது தலைவனை எதிர்த்து நின்று நடுகல்லாகிப் போனவர்கள் பலர். எனவே எம் தலைவனை எதிர்ப்பதைத் தவிர்ப்பீர்! என ஒரு வீரன் முழங்குவதைத் திருக்குறளிலும் காணலாம்.

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை

முன்னின்று கல்நின் றவர்.[15]

“நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியாகக் கண்ணகிக்குக் கோட்டம் அமைக்கப்பட்டது. அரசர்களுக்குப் பள்ளிப்படைக் கோயில்கள் எழுப்பப்பட்டன. தற்காலத்தில் வணங்கப்படும் தெய்வங்களுள் மதுரை வீரன், இருளன், கறுப்பன், நொண்டி

முதலியவை நடுகல் வகுப்பைச் சேர்ந்தவை"[16] என்று சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார். தற்காலத்திலும் இறந்தவர்களுக்குக் கல்நாட்டி வழிபாடு செய்யும் வழக்கம் உள்ளது. இதனை நடுகல் வழிபாட்டின் எச்சம் எனலாம்.

**தொகுப்புரை**

குலக்குறி வழிபாடு, நாக வழிபாடு, மந்திரச் சடங்குகள் மூலம் வழிபாடு போன்ற வழிபாடுகளும் உள்ளன. இத்தகைய பழந்தமிழ்ச் சமூகத்தின் இயற்கையான வழிபாடுகள் மெல்ல மெல்ல மாற்றமடைந்து நாகரிகச் சமுதாயத்திற்கேற்பச் சிறுதெய்வ மற்றும் பெருந்தெய்வ வழிபாடுகளாக எஞ்சி நிற்கின்றன. காலமாற்றத்திற்கேற்ப வழிபடு தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் மாறியதோடு மட்டுமின்றி வழிபடுவதன் நோக்கத்திலும் பெரும் மாற்றம் காணப்படுகின்றது. பொதுநலனுக்காக வழிபடுதல், கூட்டாக வழிபடுதல் என்னும் நிலைமாறி தனிப்பட்ட ஒருவரது நலனுக்காக மட்டும் வழிபடும் நிலை ஏற்பட்டு வருவதைக் காணலாம்.

## சான்றெண் விளக்கம்

1. சிலம்பு நா.செல்வராசு, பண்டைச் சமூக உருவாக்கமும் சிலப்பதிகாரத்தின் இலக்கிய அரசியலும் பக்-53-54
2. புறநானூறு - 143:1-5
3. ஐங்குறுநூறு - 251:1-2
4. நற்றிணை - 165:2-5
5. மேலது - 83:2
6. மேலது - 303:3-4
7. குறுந்தொகை – 87:1-2
8. கா.சுப்பிரமணியபிள்ளை, தமிழர் சமயம் ப-29
9. தொல்.பொருள்,புறத் - 60:19-22
10. புறநானூறு - 335:9-12
11. அகநானூறு - 35:8-9
12. புறநானூறு - 329:1-4
13. மேலது - 306:3-5
14. மலைபடுகடாம் 386-388
15. திருக்குறள் - 771
16. சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு ப-40